# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 10 | சைவநெறி II<br>Religion II | நேரம் :-<br>2 மணித்தியாலம் |
| சுட்டெண்:............................... | 12 \| T \| II | மேலதிக வாசிப்பு நேரம் :-<br>10 நிமிடம் |

- ❖ பகுதி II இல் இருந்து முதலாம், இரண்டாம் வினாக்கள் கட்டாயமானது. ஏனையவற்றுள் **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி-11

★ முதலாம், இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01) சுருக்கமாக விடை தருக.

1. பரம்பொருள் என்ற சொல்லின் பொருள் யாது?
2. இறைவனுக்கு நிர்விகாரி என்ற பெயர் வழங்கப்படக் காரணம் யாது?
3. அட்டபுஷ்பங்கள் நான்கு தருக.
4. சூரியமானம் என்றால் என்ன?
5. முருகன் சூரனைச் சங்காரம் செய்த திதி எது?
6. தீபாவளி என்பதன் பொருள் யாது?
7. பெரியபுராணத்தின் முதல்நூல், வழிநூல் என்பவற்றைத் தருக.
8. “மாதர் மடப்பிடியும்..” என்ற பதிகத்தின் பண் யாது?
9. சித்தாந்த சாத்திர நூல்களுள் முதன்மையானதாகப் போற்றப்படும் நூல் எது?
10. திருமுறைகளை ஓதுவதனால் கிடைக்கப்பெறும் நன்மைகள் 4 தருக.

(10x02=20 புள்ளிகள்)

02) பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி அதன் பொழிப்புரையும் தருக.

1. அங்கமும் வேதமும்….. 2. மீளா அடிமை…

3. குனித்த புருவமும்….. 4. உற்றுமை சேர்வது…

(03+02=05x02=10 புள்ளிகள்)

03) “ ஆசாரமே மேலான தருமம்”

1. ஆசாரம் என்றால் என்ன?

2. சைவ சமயத்தவரின் நாளாந்த சமயக் கடமைகள் 3 தருக.

3. ஒருவரிடம் கடமையுணர்வும், சமுதாய உணர்வும் காணப்பட வேண்டியதன் அவசியம் பற்றி சுருக்கமாக விளக்குக. (03+02+05=10 புள்ளிகள்)

04) “ ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு அல்லாமல் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்”

1. மேற்படி உறுதியாகக் கூறிய நாயனார் யார்?
2. அவருக்கு வழங்கப்படும் மறுபெயர்கள் 3 தருக.
3. அந் நாயனார் செய்த அற்புதங்கள் மூன்றினையும் அச் சந்தர்ப்பத்தில் பாடிய பாடல்களையும் எழுதுக.

(03+02+05=10 புள்ளிகள்)

05) “ ஆன்மீக மேம்பாட்டிற்கு விரதங்கள் எம்மை வழிநடத்துகின்றன”

1. விரதம் என்பதற்கு நாவலர் தரும் விளக்கம் யாது?
2. கந்தசஷ்டி விரதம் அனுஸ்டிக்கும் காலப்பகுதி யாது?
3. விநாயக சஷ்டி விரதம் பற்றி சுருக்கமாக விளக்குக. (03+02+05=10 புள்ளிகள்)

06) “ தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்”

1. தேவாசிரியர் மண்டபம் எங்குள்ளது?
2. சிவனடியார்களின் தோற்றப் பொலிவைச் சுருக்கமாக விளக்குக.
3. “பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்” என்ற பதிகத்தில் சேக்கிழார் முன்வைக்கும் விடயம் யாது? (03+02+05=10 புள்ளிகள்)